**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை: திரு.வீ.காளிதாசன், பி.காம்.,எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்.**
**2026–ம் வருடம் மார்ச் மாதம் 05–ம் நாள், வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.9/2015**
**CNR No.TNTI10-000022-2015**

ஜானகி ... வாதி

...எதிர்...

வரதராஜன் ... பிரதிவாதி

இந்த வழக்கு இறுதியாக 16.02.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி.ஆர்.கிருஷ்ணவேணி, பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.மகேசன், பி.எஸ்சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

வாதியின் உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ரூ.8,000/– வீதம் ஜீவனாம்ச தொகையாக காலம் முழுவதும் பிரதிவாதி வழங்க வேண்டுமென்றும், தாவா சொத்துக்களில் பிரதிவாதிக்குள்ள 1/3 பங்கு தொகையை பொறுத்து பொருட்பிணை ஏற்படுத்தி தீர்ப்புரை வழங்க வேண்டுமென்றும் வாதியால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :–**

i) மேற்படி வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர் கணவன், மனைவி ஆவார்கள். வாதிக்கும், பிரதிவாதிக்கும் சுமார் 36 வருடங்களுக்கு முன்பு இந்து

சமய முறைப்படி பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னிட்டு வாதிக்கும், பிரதிவாதிக்கும் கார்த்திக் என்ற மகனும், சிந்துஜா என்ற மகளும் பிறந்தனர். பிரதிவாதி மனம்போன போக்கில் வாழ்ந்து வந்துள்ளார். மேலும் பிரதிவாதிக்கு குடிப்பழக்கம் மற்றும் சூதாட்ட பழக்கமும் 1988ம் வருடம் முதற்கொண்டே இருந்து வந்தது. மேலும் அனைத்துவிதமான கெட்ட பழக்கங்களையும் பிரதிவாதி தன்வசமாக்கிக் கொண்டு இரவு பகல் என்றும் பாராமல் மதுவுக்கு அடிமையாகி பிரதிவாதியையும், அவர்களது இரு குழந்தைகளையும் கவனிக்காமல் விட்டு, பல பெண்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு வாழ்ந்து வந்துள்ளார். திருமணத்தின் போது வாதியின் பெற்றோர்கள் வாதிக்கு அணிவித்த 100 சவரன் தங்க நகைகளையும் அவரது தீய எண்ணங்களுக்காக அபகரித்துச் சென்று அனைத்தையும் அழித்துவிட்டார். இதனால் வாதியும், அவரது இரு குழந்தைகளும் உணவு, உடை மற்றும் மருத்துவத்திற்காக மிகவும் பாடுபட்டுள்ளனர். இது சம்பந்தமாக பிரதிவாதியை கேள்வி கேட்டபோது, அவர் வாதியை ஒரு மனுசியாகவே எண்ணாமல் கடுமையாக தாக்கியுள்ளார். பிரதிவாதியின் கொடுமையை தாங்க முடியாத வாதி 1992ம் வருடம் புகுந்த வீட்டிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். அன்றிலிருந்து அவரது இரு குழந்தைகளுக்கும் திருமணம் செய்து வைக்கும் வரை உண்டான அனைத்து செலவுகளையும் அரும்பாடுபட்டு செய்துள்ளார். மேற்படி வாதிக்கும், பிரதிவாதிக்குமிடையேயான திருமணம் திருப்பூர் சார்பு நீதிமன்ற உத்தரவுப்படி விவாகரத்தில் முடிந்துள்ளது. மேற்படி வாதியும், அவரது பெற்றோர்களும் அரும்பாடுபட்டு குழந்தைகளை வளர்த்து அவர்களுக்கு வேண்டிய கல்வி மற்றும் திருமணமும் செய்து வைத்தனர். அவர்களை வளர்த்து ஆளாக்குவதற்காக வாதி கடன் வாங்கிய வகையில் இதுவரை 10,00,000/–க்கும் மேல் 3ம் நபர்களுக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. தாவா 1வது அயிட்ட சொத்து பிரதிவாதிக்கு 10.03.1994 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி பூர்வீக

வகையில் பாத்தியப்பட்டது. அதில் வாதியின் மகன் கார்த்திக், மகள் சிந்துஜா மற்றும் பிரதிவாதி ஆகிய மூவருக்கும் தலா 1/3 பங்கு பாத்தியமாகும். பிரதிவாதி மனம்போன போக்கில் வாழ்ந்து வந்ததால் அவரது இரு குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்திற்கொண்டு அவர்கள் சார்பாக திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.117/1997 ல் பாகம் கோரி வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கில் கடந்த 30.04.2001 ல் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

ii) வாதி தனது குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி, வெளியே வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டு தற்போது மிகுந்த இன்னலுக்கு ஆளாகியுள்ளார். வாதியின் தந்தைக்கு வயதாகிவிட்டதால், அவரால் வாதியை சரிவர கவனிக்க இயலாத நிலையில் உள்ளார். மேலும் வாதிக்கு எந்த வருமானமுமில்லாததால், தன்னைத் தானே பராமரித்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் உள்ளார். வாதி தனது மகள் சிந்துஜாவை திருமணம் செய்து கொடுத்துவிட்டபடியாலும், வாதியின் மகன் கார்த்திக் அரசாங்கத்தின் புதிய விதிமுறைகளின் காரணமாக பாலிதின் கவர் உற்பத்தி செய்து வந்த நிறுவனம் மூடப்பட்டுவிட்ட காரணத்தினால் அவர்கள் இருவரும் வாதியை பராமரிக்க இயலாத நிலையில் இருந்து வருகின்றனர். தாவா சொத்து நொய்யல் ஆற்றை ஒட்டினாற்போல் உள்ள செல்வ செழிப்பான பூமியாகும். பிரதிவாதி அதில் தென்னந்தோப்பு அமைத்தும் விவாசயம் செய்தும், தற்போது மாதம் ஒன்றுக்கு மொத்தம் ரூ.50,000/-க்கும் மேலாக வருமானம் ஈட்டி வருகிறார். பிரதிவாதிக்கு இவ்வளவு வசதி வாய்ப்புகள் இருந்தும், அவர் வேண்டுமென்றே வாதியை பராமரிக்காமல் இருந்து வருகிறார். பிரதிவாதி சட்டப்படி வாதி பராமரிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். வாதியும், அவரது இரு குழந்தைகளும் 15.08.2014 அன்று அ.வ.எண்.111/1997 ல் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணைப்படி தாவா சொத்துக்களை பாகம் பங்கிட்டுத் தரும்படியும், வாதிக்கு

ஜீவனாம்சம் கொடுக்ககோரியும் பிரதிவாதியை அணுகினர். ஆனால் யாரும் எதிர்பாராவண்ணம், வாதிகள் மற்றும் அவர்களது குழந்தைகள் மீதும் சமூகம் நீதிமன்றத்தில் அ.வ.எண்.186/2014 ன் கீழ் வழக்கு தொடர்ந்து அது தற்போதுவரை நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் பிரதிவாதி ஷை தீர்ப்பாணையை மறைத்து தாவா சொத்துக்கள் முழுவதையும் 3ம் நபர்களுக்கு விற்க முயற்சித்து வருகின்றார். அவ்வாறு செய்ய அவருக்கு எந்தவித உரிமையும் இல்லை. பிரதிவாதியின் வருமானம் மற்றும் வாதியின் தேவையை கருத்திற்கொண்டு அவரது உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ செலவினங்களுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.8,000/- வீதம் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டுள்ளார். மேலும் தாவா சொத்துககளில் பிரதிவாதிக்குள்ள 1/3 பங்கை பொறுத்து பற்று ஏற்படுத்தவும் வாதிக்கு முழு உரிமையுள்ளது என்பதே வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கமாகும்.

**2) பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்:-**

i) வாதி தாக்கல் செய்த இந்த வழக்கு பொய்யானது மற்றும் நிலைக்கத்தக்கதல்ல. மேலும் வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளில் பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர பிற சங்கதிகளை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும். தாவா 1ம் அயிட்ட சொத்துக்கள் ஏற்கெனவே சாமளாபுரம் SBI வங்கி கிளையில் கடந்த 2004-ம் வருடத்தில் அடமானம் செய்து ரூ.5,00,000/- கடன் பெற்றுள்ளார். மேலும் பிரதிவாதிக்கு ஷை அடமான கடனை திருப்ப போதிய வசதி வாய்ப்பில்லாமல் கடனை அடைக்க முடியாத சூழ்நிலையில் உள்ளார். பிரதிவாதிக்கும் வாதிக்கும் இடையேயான திருமணம் காதல் திருமணம் ஆகும். வாதிக்கும் பிரதிவாதிக்கும் நடந்த திருமணத்தை ஏற்காத வாதியின் பெற்றோர்கள் பின் 5 வருடங்கள் கழித்துதான் மீண்டும் வாதியிடம் பேச ஆரம்பித்தார்கள். அதன்பின் வாதி அவரது பெற்றோரின் தவறான

ஆலோசனையை கேட்டு பிரதிவாதியிடம் அடிக்கடி தகராறு செய்வதும் பிரதிவாதிக்கு செய்யவேண்டிய அடிப்படை கடமைகளையும் உதவிகளையும் செய்யாமல் அவரது போக்கிலேயே இருந்துகொண்டார். மேலும் வாதி எப்போதும் அருகில் உள்ள வீடுகளில் சினிமா பார்ப்பதற்காக நீண்ட நேரம் செலவிட்டு பிரதிவாதியை முழுவதுமாக கண்டுகொள்ளாமல் இருந்து வந்துள்ளார். இதற்கு பின்னிட்டு 1992ம் வருடத்தில் வாதி பிரதிவாதியிடம் இருந்த கருத்து வேறுபாட்டால் பிரதிவாதி இல்லாத சமயத்தில் பிரதிவாதியின் வீட்டில் இருந்த அனைத்து சாமான்களையும் எடுத்துக்கொண்டு அவரது வீட்டுக்கு தன்னிச்சையாக சென்றுவிட்டார். வாதிக்கு அவரது பெற்றோர்கள் 100 பவுன் நகை போட்டார்கள் என்பது தவறானதாகும். மேலும் தற்போது வாதி கடன்காரர்களுக்கு வட்டியை திருப்பி செலுத்த சிரமப்பட்டுக் கொண்டு வருகிறார் என்பது பொய்யானது. உண்மையிலேயே வாதிதான் பிற நபர்களுக்கு வட்டிக்கு கடன் அளித்து வருகிறார். மேலும் மாதச் சீட்டுத் தொழிலும் செய்து வருகிறார். மேலும் வாதியின் தகப்பனாருக்கு வயதாகிவிட்டதால் வாதியை பராமரிக்க சிரமப்பட்டு வருகிறார் என்பது பொய்யானது. வாதியின் குழந்தைகளை, வாதி பராமரிக்கும் நிலையில் இல்லை என்பதும் வழக்கிற்காக பொய்யாகச் சொல்லப்படுகிறது. வாதியும் அவரது மகனும் இன்றைய தேதியிலும் பிரதிவாதி கொடுத்த சொத்தில்தான் வசித்துக்கொண்டு அதிலுள்ள குடோனில் தனியாக தொழில் செய்தும் வருகிறார்கள். பிரதிவாதி ஏற்கெனவே வாதிக்கும், அவரது குழந்தைகளுக்கும் எதிராக இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.186/2014 என்ற அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதியால் ஷை வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் பிரதிவாதியை துன்புறுத்தவே வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மேலும் ஏற்கெனவே வாதியை ஏமாற்ற தாவா சொத்துக்களை வேறு நபர்களுக்கு விற்க முயற்சிக்கிறார் என்பது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டாகும். வாதியின் குழந்தைகளுக்கு தாவா முதல் அயிட்ட சொத்தில்

2/3 பங்கு உரிமை உள்ளது என்பதும் தவறானது. வாதி 1992ம் வருடத்தில் பிரதிவாதியை விட்டுப் பிரிந்து செல்லும்போது அவரது குழந்தைகளை பிரதிவாதியிடம் விட்டுவிட்டுச் சென்றுள்ளார். அந்த இரு குழந்தைகளையும் பிரதிவாதி கஷ்டப்பட்டு காப்பாற்றி வந்துள்ளார். பின்னர் பிரதிவாதியின் மகள் பருவ வயதடைந்ததால் வாதி உறவினர்கள் அறிவுரையின்பேரில் இருகுழந்தைகளையும் அழைத்து சென்றுவிட்டார்.

ii) பிரதிவாதியின் தாயார் 30 பவுன் நகையை வாதி – பிரதிவாதி திருமணத்தின்போது வாதிக்கு அளித்தார். மேலும் பிரதிவாதியும் 9 பவுன் நகையை வாதிக்கு வாங்கிக் கொடுத்துள்ளார். மேற்படி நகைகளை வாதி பிரதிவாதி வீட்டில் இருந்து செல்லும்போதே எடுத்துச் சென்றுவிட்டார். வாதி பியர்லெஸ் நிறுவனத்தின் முகவராக பணிபுரிந்து மாதம் ரூ.20,000/–க்கும்மேல் மாத கமிஷன் தொகையாக இன்றைய தேதிவரை பெற்று வருகிறார். மேலும் ஷை நிறுவனத்தின் அதிக தொகைக்கு வாடிக்கையாளர்களை சேர்த்து இந்தியாவில் நம்பர் 1 முகவராக விருதும் வாங்கியுள்ளார். மேலும் வாதி அரிசி வியாபாரத் தொழிலும் நன்கு நடத்தி வந்து வருமானம் ஈட்டி வருகிறார். அந்த தொழிலில் மாதம் ரூபாய் 10,000/–க்கும் மேல் வருமானம் ஈட்டி வருகிறார். வாதி பதிவு செய்யப்படாத மாதச் சீட்டுத் தொழிலில் ஏலச் சீட்டுக்கள் நடத்தி அதன் மூலம் வருடம் ரூ.50,00,000/– வருமானம் ஈட்டி வருகிறார். வாதிக்கு திருப்பூர் நகர எல்லைக்குள் 40 செண்டு பூமியை 2007–ம் வருடத்தில் வாங்கியுள்ளார். மேற்படி சொத்தின் இன்றைய அரசு மதிப்பு ஒரு கோடியே 17 லட்சம் ஆகும். மேலும் அப்பூமியில் கட்டிடம் கட்டி பனியன் துணி தயாரிக்கும் நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுத்து மாதம் ரூ.50,000/க்கு மேல் வாடகையாக வருமானம் பெற்று வருகிறார். வாதியின் மகன் பாலிபேக் தொழில் செய்து நன்கு வருமானம் ஈட்டி வருகிறார். மேலும் திருப்பூரில் ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனமும்

நடத்தி வருகிறார். வாதி மேலும் சுமார் ஒரு கோடி மதிப்பீட்டில் வீடு கட்டி வருகிறார். வாதிக்கு பல்லடம் தாலூக்கா, பள்ளபாளையம் கிராமத்தில் சொத்துக்களும், பவர்லூம் குடோனும் உள்ளது. பூர்வீக சொத்து வகையில் வாதிக்கு 2 ஏக்கர் பூமியும் பள்ளபாளையம் கிராமத்தில் உள்ளது. வாதியின் மகளின் கணவரும் திருப்பூரில் பனியன் ஆடை தயாரிப்பு நிறுவனம் நடத்தி வருகிறார். மேலும் வாதிக்கு சொந்தமாக, மாருதி ஜென் காரும், TVS ஸ்கூட்டியும் சொந்தமாக உள்ளது. வாதி அதிக வருமானம் மற்றும் கோடிக்கணக்கான மதிப்புள்ள அசையா சொத்துக்களையும் கொண்டுள்ளார். எனவே பிரதிவாதி ஒருபோதும் வாதியை பராமரிக்க வேண்டிய அவசியம் கிடையாது. பிரதிவாதியை துன்புறுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கில் பொய்யான சங்கதிகளுடன் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி ஜீவனாம்சம் கோரிய இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, வழக்கினை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதே பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கமாகும்.

**<u>3) பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையின் சுருக்கம்:–</u>**

வாதி கடந்த 05.03.2007 ம் தேதியன்று எஸ். முத்துசாமி என்பவரிடமிருந்து திருப்பூர் தாலுகா 15 வேலம்பாளையம் கிராமத்தில் க.ச.612/2 காலையில் இருந்து 40 சென்ட் பூமியை கிரயம் பெற்றுள்ளார். மேற்படி பூமியின் இன்றைய அரசு வழிகாட்டி மதிப்பு ரூபாய் ஒரு கோடியே பதினேழு லட்சங்கள் ஆகும். மேற்படி பூமியில் கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளதுடன், அந்த பூமியில் சுமார் ரூபாய் 75 லட்சங்கள் மதிப்பில் வீடும் கட்டியுள்ளார். வாதி பிரதிவாதியுடன் சுமூகமாக வாழ்ந்த காலத்தில் 04.05.1989 ம் தேதியன்று பல்லடம் தாலுக்கா சாமளாபுரம் கிராமத்தில் க.ச.437 காலையில் 5 சென்ட் பூமியை வாதிக்கும் அவரது மகன் கார்த்திகேயனுக்கும் தான செட்டில்மென்ட் ஆவணம் மூலம்

கொடுத்துள்ளார். பிரதிவாதி மேலும் பல்லடம் தாலுகா சாமளாபுரம் கிராமத்தில் 04.05.1989ம் தேதியன்று க.ச..437/3 காலையில் 15 சென்ட் காலியிடமும் அதில் 960 சதுரடி ஓடு போட்ட வீடும் மற்றும் அதை சேர்ந்த உபகரணங்களையும் சேர்த்து வாதிக்கும், அவரது மகன் கார்த்திகேயனுக்கும் தான செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி சங்கதிகளை வாதி வேண்டுமென்றே அவர் தாக்கல் செய்துள்ள வழக்கில் மறைத்துள்ளார். எனவே வாதி உண்மை சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்பதே பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கமாகும்.

4) **எழுவினாக்கள்**:–

மேற்படி இருதரப்பு வாதுரைகளையும், வழக்குரை, எதிர் வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கின் தீர்விற்காக கடந்த 21.10.2016 அன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட 1 முதல் 4 எழுவினாக்களை வனைந்துள்ளது.

| | |
|---|---|
| **எழுவினா – 1** | Whether the plaintiff is entitled to get the relief of maintenance as prayed for in the suit ? |
| **எழுவினா – 2** | Whether the plaintiff is entitled to get the relief of charge over the suit properties ? |
| **எழுவினா – 3** | Whether the relief of sale of charged properties in default of payment of maintenance can be granted to plaintiff ? |
| **எழுவினா – 4** | To what other relief is entitled to ? |

**5) கூடுதல் எழுவினா:–**

மேற்படி அசல் வழக்கில் இருதரப்பு வாதுரைகளையும், கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் கடந்த 27.11.2018 தேதியன்று கீழ்க்கண்ட கூடுதல் எழுவினாவை வனைந்துள்ளது.

| | |
|---|---|
| **கூடுதல் எழுவினா 1** | Whether the plaintiff is having the financial capacity to maintain herself ? |

6) வாதி தரப்பில் வாதி ஜானகி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பில் பி.வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணையின் போது வாதி தரப்பில் வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி வரதராஜன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் செந்தில்குமார் என்பவர் அழைப்பாணையின் பெயரில் பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற சாட்சியாக திருப்பூர் மாநகராட்சி அலுவலக இளநிலை பொறியாளர் சிவக்குமார் என்பவர் நீ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக நீ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

7) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதிக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 1978ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னர் வாதியும், பிரதிவாதியும் பிரதிவாதியின் வீட்டில் திருமண வாழ்க்கையை தொடங்கினார்கள். திருமணத்திற்கு பின்னர் பிரதிவாதியின் நடவடிக்கைகள் மனம் போன போக்கில் இருந்து வந்தது. கடந்த 1988ம் ஆண்டு முதல் பிரதிவாதிக்கு குடிப்பழக்கமும், சூதாட்ட பழக்கமும் ஏற்பட்டு வாதியையும், அவரது குழந்தைகளையும் கவனிக்காமல் இருந்து வந்துள்ளார். வாதியின் நகைகளையும் விற்று அழித்து விட்டதால் வாதி அதனை

தட்டி கேட்டதற்கு கடந்த 1992ம் வருடத்தில் பிரதிவாதியின் வீட்டிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளார். வாதியும், வாதியின் பெற்றோர்களும், வாதியின் குழந்தைகளை படிக்க வைப்பதற்கும், வளர்ப்பதற்கும் மிகவும் சிரமப்பட்டு கடன் வாங்கி வளர்த்துள்ளார்கள். வாதி அவரது பெற்றோர்களின் வீட்டில் இருந்த போது வாதியையோ, வாதியின் குழந்தைகளையோ பிரதிவாதி கவனிக்கவில்லை. குழந்தைகளையும் வந்து பார்த்ததில்லை. வாதிக்கு எதிராக பிரதிவாதி விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் விவாகரத்தும் வழங்கப்பட்டுள்ளது. தாவா 1வது அயிட்ட சொத்தானது பிரதிவாதிக்கு கடந்த 10.03.1994 தேதியிட்ட பாகப்பிரிவினையின் படி பாத்தியமாகும். மேற்படி பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் வாதியின் குழந்தைகள் இருவருக்கும் தலா 1/3 பங்கு பாகம் உரிமையுள்ளது. எனவே, வாதியின் குழந்தைகளுக்கு சொத்தில் உள்ள 2/3 பங்கு பாக உரிமையை பொறுத்து குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.117/1997 என்ற வழக்கினை தாவா 1வது அயிட்ட சொத்தினை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் கடந்த 30.04.2001 தேதியில் முதல் நிலை தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

8) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் மேலும் தனது வாதத்தில், தாவா 2வது அயிட்ட சொத்தானது பிரதிவாதியின் தந்தை சுயார்ஜித வகையில் கிரையம் பெற்று பிரதிவாதியின் பெயருக்கு உயில் மூலம் எழுதிவைத்த வகையில் பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்தாகும். மேற்படி அசல் வழக்கு எண்.117/1997 வழக்கானது பல்லடம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி வழக்கின் கோப்பானது காணாமல் போய்விட்டதாக நீதிமன்றத்தில்

தெரிவிக்கப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவானது கோப்பில் எடுக்கப்படாமலேயே இருந்துவந்துள்ளது. அதன் காரணமாக வாதி வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த முடியாமலும், தன்னை பாதுகாக்க முடியாத நிலையிலும் இருந்து வந்துள்ளார். வாதியின் குழந்தைகளும் வாதியை கவனித்து கொள்ளும் நிலையில் இல்லாத காரணத்தினால் வாதி இந்த வழக்கை பராமரிப்பு தொகை கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்கள் விவசாய நிலம் என்பதால் அதில் விவசாயம் செய்தும் தென்னை மரங்களை அறுவடை செய்து மாதம் ரூ.30,000/- வரை சம்பாதிக்கின்றார். பணப் பயிர்கள் பயிரிட்டும் ரூ.20,000/- வரை சம்பாதிக்கின்றார். கடந்த 2006ம் ஆண்டு பிரதிவாதி 2வது திருமணம் செய்து கொண்டு 2வது திருமணத்தின் மூலம் அவருக்கு குழந்தையும் உள்ளது. வாதி தற்போது வரை வேறு திருமணம் எதுவும் செய்து கொள்ளவில்லை. எனவே, பிரதிவாதி வாதியை அவரது ஆயுள்காலம் வரை பராமரிக்க வேண்டிய கடமை உள்ளது. பிரதிவாதிக்கு வாதியை பராமரிப்பதற்கான போதிய வசதி வாய்ப்புகளும், வருமான வழிவகையும் உள்ளதால் வாதியை பராமரிக்க வேண்டியது அவரது சட்டப்பூர்வ கடமையாகும். வாதியும், அவரது குழந்தைகளும் பிரதிவாதியை கடந்த 15.08.2014 தேதியில் அசல் வழக்கு எண்.117/1997 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையில் வாதியின் குழந்தைகளுக்குரிய 2/3 பங்கை பிரித்து கொடுக்க கோரிய போது மேற்படி வாதி மற்றும் குழந்தைகளின் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் பிரதிவாதி, வாதி மற்றும் அவரது குழந்தைகளுக்கு எதிராக தாவா 1வதுஅயிட்ட சொத்தினை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.186/2014 வழக்கை தாக்கல் செய்துள்ளார். தற்போதைய நிலையில் மாதம் ரூ.8,000/- என்பது தன்னை பராமரித்து கொள்வதற்கு போதுமான தொகை கிடையாது. இருப்பினும் கடந்த 2015ம் ஆண்டு வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாலும், கடந்த 10

வருடங்களுக்கு மேலாக வாதி தன்னை பராமரிக்க முடியாத நிலையில் இருந்து வருவதாலும் வாதி கோரிய பரிகாரங்களானது அவருக்கு கிடைக்கத்தக்கது என்று வாதிட்டார்.

9) கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதிக்கும் பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்றது என்பது உண்மையே. ஆனால், வாதி தான் எவ்வித காரணமும் இன்றி கடந்த 1992ம் ஆண்டில் பிரதிவாதியை தனது விருப்பப்படி பிரிந்து சென்று விட்டார் என்பதே உண்மையாகும். கடந்த 1996ம் ஆண்டு நீதிமன்றத்தின் மூலம் வாதிக்கும், பிரதிவாதிக்கும் திருமணத்தை ரத்து செய்து விவாகரத்தும் வழங்கப்பட்டுள்ளது. வாதி, பிரதிவாதியை பிரிந்து 23 ஆண்டுகள் வாழ்ந்து வந்து கடந்த 2015ம் ஆண்டில் தான் பராமரிப்பு தொகை கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். கணவரை பிரிந்து சென்று 23 ஆண்டுகள் தனியாக வாழ்ந்து வந்த நபர் தற்போது விவாகரத்து பெற்ற கணவருக்கு எதிராக பராமரிப்பு தொகை கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியாது. வாதி 23 ஆண்டுகள் யாருடைய தயவும் இன்றி போதிய வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்து வந்து விட்டு தற்போது பிரதிவாதி வாதி மற்றும் அவரது குழந்தைகளுக்கு எதிராக அசல் வழக்கு எண்.186/2014 வழக்கை தாக்கல் செய்ததன் காரணமாக வேண்டுமென்றே இந்த வழக்கினை தன்னை பராமரித்து கொள்ள முடியவில்லை என்று தெரிவித்து பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி கடந்த 1989ம் ஆண்டிலேயே 04.05.1989 தேதியிட்ட 2 செட்டில்மெண்ட் ஆவணங்களின் மூலம் வாதிக்கும், அவரது மகன் கார்த்திகேயனுக்கும் சொத்துக்களை செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார்.

10) கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேலும் தனது வாதத்தில், கடந்த 05.03.2007 தேதியில் வாதி அவரது பெயரில் 40 செண்ட் அளவிற்கு சொத்தினை கிரையம் பெற்றுள்ளார். வாதியின் மகனான கார்த்திகேயன் கடந்த

21.10.2024 தேதியில் அவரது பெயரில் ரூ.10,39,000/-கிரையத்தொகைக்கு சுமார் 1.18 1/2 ஏக்கர் பரப்பளவு பூமியை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி சொத்தின் சந்தை மதிப்பு 50 லட்சம் இருக்கும். வாதியும், வாதியின் மகனும் போதிய வசதி வாய்ப்புகளுடனும் வாழ்ந்து வரும் நிலையில் இந்த வழக்கிற்காக வாதி தன்னை பராமரித்து கொள்ள முடியவில்லை என்றும், வாதியின் குழந்தைகளால் வாதியை கவனித்து கொள்ளும் நிலையில் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளார். தனது பெயரில் சொத்தினை கிரையம் பெறும் ஒரு பெண் தன்னை பராமரித்து கொள்ள இயலவில்லை என்று கூறுவது ஏற்புடையதல்ல. வாதி அவரது மருமகனுடன் சேர்ந்து செய்யும் தொழிலில் அவருக்கு போதிய வருமானங்கள் வருகின்றது. மேலும், பிரதிவாதி வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள தறிகுடோனிலிருந்து மாத வாடகையாக ரூ.35,000/-க்கும் மேல் வருகிறது. ஆனால், பிரதிவாதி விபத்தில் அடிபட்டும், நோய்வாய்பட்டும் தற்போது தான் குணமடைந்து வருகிறார் என்றும், தற்போது சம்பாதிக்கும் நிலையில் இல்லை என்பதால் தற்போது எந்த வருமானமும் இல்லாமல் அவரது 2 வது மனைவியின் சம்பாத்தியத்தில் தான் வாழ்ந்து வருகிறார் என்றும், பிரதிவாதி வாதிக்கும் எந்தவித ஜீவனாம்சமும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், எனவே, வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் வாதிட்டார்.

**11) <u>எழுவினா எண்-1 மற்றும் கூடுதல் எழுவினா எண்-1 க்கான தீர்வு:-</u>**

| | |
|---|---|
| **எழுவினா – 1** | Whether the plaintiff is entitled to get the relief of maintenance as prayed for in the suit ? |
| **கூடுதல் எழுவினா 1** | Whether the plaintiff is having the financial capacity to maintain herself ? |

இருதரப்பு வாதுரைகள் வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றவணங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், வாதிக்கும், பிரதிவாதிக்கும் கணவன் மனைவி உறவு இருந்துள்ளது என்பதும், இருவருக்கும் கடந்த 1978 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றுள்ளது என்பதும், திருமண வாழ்வின் விளைவாக கார்த்திக் என்ற மகனும், சிந்துஜா என்ற மகளும் உள்ளார்கள் என்பதும், கடந்த 1992 ம் ஆண்டிலிருந்து வாதியும், பிரதிவாதியும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதும், வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையேயான திருமணமானது திருப்பூர் சார்பு நீதிமன்ற உத்தரவுப்படி விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது என்பதும், தாவா 1 வது அயிட்ட சொத்தினை பொறுத்து வாதி மற்றும் பிரதிவாதியின் குழந்தைகள் கார்த்திக் மற்றும் சிந்துஜா ஆகியோரின் சார்பில் அசல் வழக்கு எண்.117/1997 என்ற வழக்கினை பாகப்பிரிவினைக்காக கோரி தாக்கல் செய்து மேற்படி வாதியின் குழந்தைகள் மற்றும் பிரதிவாதி ஆகியோர்களுக்கு தலா 1/3 பங்கு பாத்தியமுள்ளதாக கடந்த 30.04.2001 தேதியில் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக உள்ளது.

12) பிரதிவாதி தரப்பில் வாதி மற்றும் அவரது மகன் பெயரில் கடந்த 04.05.1989 தேதியிட்ட இரண்டு செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதிவைத்துள்ளார் என்றும், வாதி தனது பெயரில் கடந்த 05.03.2007 தேதியில் 40 செண்ட் பரப்பளவில் சொத்தினை வாங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது உண்மை என்று வாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டாலும், மேற்படி 04.05.1989 தேதியிட்ட பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணங்களை பிரதிவாதி அவர் வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாததால் அதனை வாதியின் தந்தை செலுத்தியதற்காக ஈடாக பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி

தேதியிலேயே கடனை அடைத்ததை உறுதி செய்யும் விதமாக பிரதிவாதி வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளதாக வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று 05.03.2007 தேதியிட்ட பி.வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தினை தான் தனது பெயரில் வாங்கவில்லை என்றும், தனது சம்பந்தி தான் வாங்கி அதில் தனது மாப்பிள்ளை கம்பெனி கட்டியுள்ளார் என்று வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13) மாண்புமிகு உச்சநீதிமன்றம் Rajnesh Vs Neha and another in 2021 AIR (SC) 569 என்ற வழக்கில் தீர்மானித்துள்ளவாறு குடும்ப உறவு சம்பந்தமான ஜீவனாம்சம் கோரும் வழக்குகளில் தரப்பினர்கள் அவர்களது சொத்து மற்றும் பொறுப்புகள் சம்பந்தமான பட்டியலினை பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்பது கட்டாய நடைமுறையாகும். மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் வாதி தரப்பில் பரிந்துரைக்கப்பட்ட வடிவில் அவரது சொத்து மற்றும் பொறுப்புகள் சம்பந்தமான பட்டியலினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். ஆனால், பிரதிவாதி தரப்பில் பரிந்துரைக்கப்பட்ட வடிவில் தாக்கல் செய்யாமல் கூடுதல் பிரமாண வாக்குமூலம் வடிவிலேயே தாக்கல் செய்துள்ளார். மேற்படி, பிரதிவாதியின் கூடுதல் பிரமாண வாக்குமூலத்திலும், பிரதிவாதியின் சொத்தினை பற்றியும், வருமானத்தை பற்றியும் தெரிவித்துவிட்டு, சிறிய குறிப்பில் தனது பெயரில் ரூ.5,00,000/- கடன் உள்ளதாகவும் மட்டுமே தெரிவித்துள்ளார். தான் விறகு விற்பனை தொடர்பான வரவு செலவுகளை தனது மனைவியுடன் சேர்ந்து பராமரித்து வருவதாகவும், தனக்கு அதனை தவிர வேறு வேலைகள் இல்லையென்றும், தனது உடல்நிலை சரியில்லாமல் உள்ளதாகவும் மட்டுமே மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி தனக்கு எவ்வளவு வருமானம் உள்ளது என்றோ,

தனது பெயரிலுள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பற்றியோ எதையும் தெரிவிக்கவில்லை.

14) மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேற்படி Rajnesh Vs Neha and another in 2021 AIR (SC) 569 வழக்கில் ஜீவனாம்சம் தொடர்பான சட்டங்களானது நாடோடிகளாக வாழ்வதையும், வறுமையில் வாடுவதையும் தடுப்பதற்காக இயற்றப்பட்டுள்ளது என்றும், மனைவி வருவாய் ஈட்டினால் கூட அவருக்கு வருவாய் குறைவாக இருக்கும் பட்சத்தில் கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற உரிமையுள்ளது என்றும், ஜீவனாம்சம் வழங்குவதற்கு கணவரின் நிதி உள்ளிட்ட மற்ற காரணிகளை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும், மனைவி தன்னை தனிப்பட்ட முறையில் தன்னை பராமரித்துக்கொண்டு வருவாய் ஈட்டும் நபராக இருந்தால் மட்டுமே ஜீவனாம்சம் கணவர் வழங்க தேவையில்லை என்றும் தீர்மானித்துள்ளது. மேலும், மாண்புமிகு உச்சநீமன்றம் Sanju Devi Vs State of Bihar in 2017 Supreme (SC) 1718 என்ற வழக்கில் சட்டப்படி விவாகரத்து பெற்ற கணவனிடமிருந்து மனைவி ஜீவனாம்சம் கோருவதற்கு உரிமை உள்ளது என்று தீர்மானித்துள்ளது.

15) மாண்புமிகு அலகாபாத் உயர்நீதிமன்றம் மேற்படி Parul Tyagi Vs Gaurav Tyagi in 2023 Supreme (ALL) 1423 வழக்கில் 15 ஆண்டுகள் கழித்தும் மனைவி ஜீவனாம்சம் கோர முடியும் என்றும், காலம் கடந்ததால் மட்டும் அவரது உரிமை அற்றுப்போய் விட்டதாக அர்த்தமல்ல என்றும் தீர்மானித்துள்ளது. மாண்புமிகு கல்கத்தா உயர்நீதிமன்றம் மேற்படி Lalu roy Vs Kabita roy in 2025 Supreme (Online) (Cal) 5373 என்ற வழக்கில் 24 ஆண்டுகள் கழித்து ஜீவனாம்சம் கோரினாலும், வழக்கின் சூழ்நிலைகளை பொறுத்து அனுமதிக்கத்தக்கது என்று முடிவுசெய்துள்ளது. மேற்கண்டவாறு மாண்புமிகு அலகாபாத் உயர்நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு கல்கத்தா உயர்நீதிமன்றம் ஆகியவை தீர்மானித்துள்ளதை

போன்று பல ஆண்டுகள் கழித்து ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்தாலும் நிலைக்கத்தக்கது என்பதும், வழக்கின் சூழ்நிலை, சங்கதிகள், மனைவியின் தன்னை பராமரித்துக்கொள்ளும் தகுதி மற்றும் திறன், கணவனின் வருமான வாய்ப்பு மற்றும் சூழ்நிலைகள் உள்ளிட்ட காரணிகளை கவனத்தில் கொண்டு தீர்மானிக்க வேண்டுமென்பதும் தெளிவாகிறது.

16) பிரதிவாதி தரப்பில் வாதி தாக்கல் செய்துள்ள ஜீவனாம்ச கோரிக்கைக்கு செய்துள்ள முக்கியமான எதிர்வாதம் வாதிக்கு போதிய வசதி வாய்ப்புகள் உள்ளது என்பதும், அவரால் தன்னை பராமரித்துக்கொள்ளும் தகுதி அவருக்கு உள்ளது என்பதும் தற்போதும் அவருக்கு போதுமான வருவாய் உள்ளது என்றும், பிரதிவாதி அசல் வழக்கு எண்.186/2014 வழக்கினை வாதி மற்றும் அவரது குழந்தைகளுக்கு எதிராக தாக்கல் செய்ததன் காரணமாகவே இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்பதேயாகும். மேற்படி சங்கதியை நிரூபிப்பதற்காக பிரதிவாதி தரப்பில் வாதி கடந்த 2007ம் ஆண்டில் தனது பெயரில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமாக சொத்து வாங்கியுள்ளார் என்றும், பிரதிவாதி பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்கள் மூலமாக சொத்துக்களை வாதி மற்றும் அவரது மகன் பெயரில் செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளதாகவும், பிரதிவாதி அளித்த தறி இயந்திரங்கள் மூலமாக வாதி தொழில் செய்து போதுமான அளவு சம்பாத்திக்கிறார் என்று தெரிவித்து ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

17) வாதி தரப்பிலோ, பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களை பிரதிவாதி பஞ்சாப் நேசனல் வங்கியில் ரூ.44,000/- மற்றும் முருகன் பைனான்சில் வாங்கிய கடன் தொகை ரூ.20,000/- என மொத்தம் ரூ.64,000/- கடனாக பெற்று அதனை அடைக்க முடியாமல் போனதால் அதனை வாதியின் பெற்றோரிடமிருந்து பணம் வாங்கி மேற்படி கடன்களை அடைத்தற்காகதான் ஈடாக மேற்படி சொத்துக்களை பிரதிவாதி, வாதி பெயரிலும், அவரது மகன்

பெயரிலும் செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதி வைத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை நிரூபிப்பதற்காக பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்கள் எழுதிகொடுக்கப்பட்ட தேதியிலேயே பிரதிவாதி வாங்கிய கடனை வாதி அடைத்ததற்காக தறி இயந்திரங்களையும், அதன் பொருட்களையும் வாதிக்கே ஒப்படைத்து அதே தேதியிலேயே பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தை வாதி தரப்பில் வா.சா.ஆ.2 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார்.

18) வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மேற்படி 3 ஆவணங்களும் ஒரே தேதியில் தான் எழுதப்பட்டுள்ளது. மேற்படி 3 ஆவணங்களுக்கும் சாட்சிகளாக கிருஷ்ணசாமி மற்றும் செல்லப்பன் ஆகிய இருவர் தான் கையெழுத்துப்போட்டுள்ளார்கள் என்று தெரியவருகிறது. பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.2 ஆவணத்தினை பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்கள் எழுதிக்கொடுக்கும் போது சேர்த்து எழுதிவைத்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், வாதி தரப்பில் மோசடியாக மேற்படி ஆவணம் எழுதி வாங்கப்பட்டுள்ளது என்பதற்கு வாதிக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததாக எதையும் தெரிவிக்கவில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்று பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. பொதுவாக அசையா சொத்தின் மதிப்பானது ரூ.100/–க்கும் மேல் இருக்கும் போது தான் கட்டாயம் பதிவு செய்யவேண்டியது நடைமுறையாகும். ஆனால், அசையும் சொத்துக்கள் சம்பந்தமாக கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்று எதுவும் கிடையாது. வா.சா.ஆ.2 ஆவணமானது பிரதிவாதியால், வாதிக்கு 6 தறிகளையும், அதற்குண்டான சாமான்களையும் வாதியிடம் கொடுப்பதாக அசையும் சொத்தினை பொறுத்து தான் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி

ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்ற ஆட்சேபனையானது நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

19) பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த தறிகுடோன் மூலமாக மாத வாடகையாக ரூ.35,000/− வருகிறது என்றும், வாதி கடந்த 2007 ம் ஆண்டில் வாங்கிய சொத்தின் மதிப்பு 40 கோடி இருக்கும் என்றும், வாதியின் தகப்பனார் வாதி பெயருக்கு 1 1/2 கோடி மதிப்பிலான சொத்துக்கள் கொடுத்துள்ளார் என்றும், அதிலிருந்து வருமானம் வருகிறது என்றும் சொன்னாலும், அவ்வாறு சொத்துக்களின் மதிப்பு பல கோடிகளில் உள்ளது என்பதற்கோ, அதிலிருந்து வாதிக்கு வருமானம் வருகிறது என்பதற்கோ பிரதிவாதி தரப்பில் எந்தவொரு ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி தரப்பில் வாதியின் மருமகன் செந்தில்குமார் என்பவருக்கு அழைப்பாணை அனுப்பி இந்நீதிமன்றத்தில் பி.வா.சா.2 ஆக விசாரணை செய்துள்ளார்கள். மேற்படி, பி.வா.சா.2 தனது சாட்சியத்தில் தனது மனைவின் தாயாரான வாதி ஜானகியின் வருமான விவரங்கள் பற்றி தனக்கு தெரியாது என்றும், அவரது பெயரில் தான் தான் வருமான வரி செலுத்தும் விவரங்களை கவனித்து வந்ததாகவும், கடந்த 6 வருடங்களுக்கு முன்பாக அவர் நடத்தி வந்த நிறுவனத்தை மூடிவிட்டதால் தற்போது பார்ப்பதில்லை என்றும், அவரது வருமான வரி எவ்வளவு செலுத்தப்பட்டது என்பது தெரியாது என்றும், தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

20) பி.வா.சா.2 செந்தில்குமார் வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் போது அவர்தான் தனது மாமியார் ஜானகியம்மாள் பெயரில் நிறுவனம் நடத்தி வந்ததாகவும், தான் தான் தனது மாமியார் பெயரில் வருமான வரி கணக்கு எண் வாங்கி வரி செலுத்தி வந்ததாகவும், நிறுவனத்தில் வந்த வருமானத்தை தான்

தான் பயன்படுத்தி வந்ததாகவும், பெயரளவிற்கு தான் அவரது பெயரில் நிறுவனம் இருந்ததாகவும், நிர்வாகம் அனைத்தையும் அவர் மட்டுமே பார்த்து வந்ததாகவும், நிறுவனம் சம்பந்தமாக கரூர் வைசியா வங்கியில் செய்த பரிமாற்றங்கள் எதுவும் தனது மாமியாருக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக கடந்த 01.08.2023 தேதியில் தாக்கல் செய்துள்ள பட்டியலில் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வாதியின் பெயரில் வருமான வரி தாக்கல் செய்யப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வாதிக்கும், அவரது மகனுக்கும் வாடகை வருமானமாக ரூ.5,000/– வருவதாகவும், 04.05.1989 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணங்களின் படி எழுதிவைக்கப்பட்ட சாமளாபுரம் கிராமம், க.ச.437/3 காலையில் உள்ள 20 செண்டில் சரிபாதி உரிமையுள்ளதாகவும், வேலம்பாளையம் கிராமம் க.ச.612/2 காலையில் 0.45 ஏக்கர் பரப்பளவு பூமி வாதிக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்டது என்றும், வாதியின் மகனும், மருமகனும் சேர்ந்து நடத்திய கார்மெண்ட் தொழில் கடந்த 2022ல் மூடப்பட்டதாகவும், வாதி பெயரில் இருசக்கர வாகனம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21) வாதி பெயரில் நான்கு சக்கர வாகனங்கள் உள்ளதாக தெரிவித்தாலும் அவ்வாறு உள்ளதற்கு எந்தவொரு ஆவணமும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், வாதி பெயரில் கட்டிடங்கள் உள்ளதாக தெரிவித்து பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.6 புகைப்படங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி புகைப்படங்களை குறியீடு செய்யும் போதே இந்திய சாட்சிய சட்டம் சட்டப்பிரிவு, 65 (பி)ன்படியான சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்று வாதி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி, ஆட்சேபனையுடன் தான் பி.வா.சா.ஆ.6 புகைப்படங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னரும் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.6 புகைப்படங்களுக்கு இந்திய சாட்சிய சட்டம் சட்டப்பிரிவு, 65 (பி)ன்படியான சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் தீர்மானித்துள்ள வகையில் மேற்படி சான்றிதழ், தாக்கல் செய்யப்படாத ஆவணங்கள் சட்டப்படி சாட்சியமாக ஏற்கமுடியாது என தீர்மானித்துள்ளதன் அடிப்படையில் பி.வா.சா.ஆ.6 புகைப்படங்களை இந்நீதிமன்றத்தால் கவனத்தில் கொள்ள முடியாது. நி.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட திருப்பூர் மாநகராட்சி இளநிலை பொறியாளரும் வாதியின் கட்டிடம் என கூறிய கட்டிடம் தொடர்பான அனுமதி ஆவணங்கள் பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், தற்போது இல்லை என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம் பல ஆண்டுகளுக்கு முன்பு தான் வாதி கட்டிடம் கட்டியுள்ளார் என்பது தெரிகின்றது. தற்போது எந்தக் கட்டிடமும் கட்டவில்லை என்றும் தெளிவாகிறது.

22) வாதி தரப்பில் வாதியின் தந்தைக்கு வயதாகிவிட்டதாலும், வாதிக்கும் வயதாகிவிட்டதாலும் தற்போதைய சூழ்நிலையில் வாதியின் மகன் மற்றும் மகளால் வாதியை கவனித்துக்கொள்ளும் நிலையில் இல்லாததாலும், வாதியால் தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள இயலவில்லை என்றும், அவரைப் பராமரித்துக்கொள்வதற்கு முடியாததால் பிரதிவாதி ஜீவனாம்சம் வழங்கவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது. வாதி தாக்கல் செய்துள்ள சொத்து மற்றும் பொறுப்புகள் பட்டியல் தொடர்பான பிரமாண வாக்குமூலத்தில் தனக்கு 62 வயதாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போதைய சூழலில் வாழ்க்கை நடத்துவதற்கு மிகுந்த சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.2 சாட்சியத்திற்கு முரணாக வாதி பெயரில் தற்போதும் நிறுவனம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்றோ, வாதி வருமானம் ஈட்டி

வருகிறார் என்றோ சாட்சியங்களையோ, சான்றாவணங்களையோ முன்னிலைப்படுத்தவில்லை. பி.வா.சா.2 தனது சாட்சியத்தில் 6 வருடங்களுக்கு முன்பாக நிறுவனத்தை மூடி விட்டதாக சொல்லியுள்ளதற்கு முரணாக நிறுவனம் தற்போதும் இயங்கிவருகிறது என்று எந்த ஆவணத்தையும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

23) வாதி சொத்து மற்றும் பொறுப்புகள் பட்டியல் தொடர்பான பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ள வங்கி கணக்கு பட்டியலில் அவரது சாமளாபுரம் ஸ்டேட் பேங்க் ஆப் வங்கி 11.08.2016 முதல் 07.02.2023 வரையிலான வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வங்கி கணக்கில் 25.09.2021 தேதிக்கு பின்னர் பெரிதாக எந்த பரிமாற்றங்களும் நடைபெறவில்லை என்பதும், மேற்படி வங்கி கணக்கில் இருப்பாக ரூ.4,669.54/- தொகை மட்டுமே உள்ளது என்பதும் தெரிகிறது. ஆனால், பிரதிவாதி தரப்பில் வாதியின் மகனான கார்த்திக்கேயன் அவரது பெயரில் சமீபத்தில் சந்தை மதிப்பில் ரூ.50,00,000/-ம், அரசு வழிகாட்டு மதிப்பில் ரூ.10,39,000/-மும், உடைய 1.18 1/2 ஏக்கர் பரப்பளவு பூமியை பிரதிவாதியின் சொத்திற்கு அருகில் வாங்கியுள்ளதாகவும், எனவே, வாதியால் அவரை பராமரித்துக்கொள்ள இயலவில்லை என்று சொல்வது உண்மையல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதியின் மகன் அவ்வாறு சொத்து வாங்கியுள்ளார் என்று பிரதிவாதி தரப்பில் எந்தவொரு ஆவணத்தையும் இந்த வழக்கில் குறியீடு செய்யவில்லை. மேற்படி, ஆவணத்தின் சான்றிட்ட நகலினை மட்டும் குறிப்பாணை மூலமாக இறுதி வாதுரையின் போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

24) வாதியின் மகன் சொத்து வாங்கும் அளவிற்கு வசதி வாய்ப்புகளுடன் இருந்தாலும் கூட ஒரு பெண்ணை அவரது கணவன் தான் பராமரிக்க வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்ட சட்டமாகும். ஒரு கணவன் தனது மனைவியை

தன்னால் பராமரிக்க முடியாது, தனது மகன் தான் அவரை பராமரிக்க வேண்டும் என்று தனது கடமையை தட்டிக் கழிக்க முடியாது. மேற்சொன்னவாறு மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளவாறு விவாகரத்து வழங்கப்பட்ட மனைவியாக இருந்தாலும் கூட கணவனிடமிருந்து ஜீவனாம்சம் கோர உரிமையுள்ளது என்றதன் அடிப்படையில் மனைவியை கணவன் தான் பராமரிக்க வேண்டிய இடத்தில் முதன்மையான நிலையில் உள்ள நபராவார். பிரதிவாதி தான் அசல் வழக்கு எண்.117/1997 பாகப்பிரிவினை வழக்கு சொத்தினை முழுமையாக அனுபவித்து வருகிறார் என்றும், தாவா 2 வது அயிட்ட சொத்தினையும் அனுபவித்து விறகு மற்றும் விவசாயம் செய்து தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ.50,000/-க்கும் மேலாக வருமானம் ஈட்டி வருகிறார் என்றும் வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தனது பி.வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது விவசாயம் செய்வேன் என்றும், விறகு வாங்கி விற்பேன் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். தாவா சொத்துக்கள் முழுவதும் தென்னை தோப்பாக உள்ளது என்று வாதி தரப்பில் கேட்ட கேள்விக்கு 3 ஏக்கர் மட்டும் தென்னை தோப்பாக உள்ளது என்றும், மேற்படி தென்னை மரங்களின் வயது 16 வருடங்கள் இருக்கும் என்றும் சாட்சியமளித்துள்ளார். ஆனால், மேற்படி தென்னை மரங்கள் காய்ப்பில் இல்லையென்று தெரிவித்துள்ளார். 16 வருட தென்னை மரங்கள் 3 ஏக்கர் பரப்பளவிற்கு காய்ப்பில் இல்லையென்பது நம்பும் படியாக இல்லை. மேலும், பிரதிவாதியின் தனது வருமானம் மற்றும் சொத்து மற்றும் பொறுப்புகள் சம்பந்தமான பட்டியலை முழுமையாக தாக்கல் செய்யாமல் வெறும் சங்கதி மறுப்பிற்காக கூடுதல் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல.

25) பிரதிவாதி தரப்பில் தனக்கு சொத்துக்களிலிருந்து எவ்வளவு வருவாய் வருகின்றது என்று எதையும் குறிப்பிட்டு சொத்து மற்றும் பொறுப்புகள்

சம்பந்தமான பட்டியலை உரிய வடிவில் முழுமையாக தாக்கல் செய்யாமல் இருப்பதால் வாதி தரப்பில் பிரதிவாதியின் வருமானத்தை பற்றி சொல்லியுள்ளதை பொறுத்து அவருக்கு எதிராக எதிரிடை அனுமானம் கொள்ளவேண்டியுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், பிரதிவாதி கடந்த 2005ம் ஆண்டு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா சாமளாபுரம் கிளையில் ரூ.4,90,000/- அடமான கடன் பெற்று வா.சா.ஆ.3 ஆவணம் வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்பதையும், கடந்த 31.01.2018 தேதியிட்ட வா.சா.ஆ.4 அடமான மீட்பு ஆவணத்தின் மூலமாக மேற்படி கடனை அடைத்து மீட்டுள்ளார் என்பதையும், கடந்த 04.03.2022 தேதியிட்ட வா.சா.ஆ.6 அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்து ரூ.9,50,000/- கடனை தனது 2வது மனைவியுடன் சேர்ந்து வாங்கியுள்ளார் என்பதையும் பி.வா.சா.1 தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், 10.04.2018 தேதியிட்ட வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலமாக தாவா 2வது அயிட்ட சொத்தில் 30 செண்ட் அளவிற்கு தனது 2வது மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்பதையும், மேற்படி சொத்தினை தனது 2வது மனைவி ஹரி நந்தினி பைனான்ஸ் என்ற நிறுவத்தில் அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளார் என்பதையும் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையின் போது ஒப்புக்கொண்டுள்ளார். அ.வ.எண்.117/1997 வழக்கில் கடந்த 30.04.2001 தேதியிலேயே முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் கூட, தற்போது வரை இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படாமல் இந்நீதிமன்றத்திலேயே நிலுவையில் இருந்து வருகிறது. மேலும், தாவா 1வது அயிட்ட சொத்து முழுவதையும் பிரதிவாதி மட்டுமே அனுபவித்து வருகின்றார். தனது குழந்தைகளின் பங்கினை கூட பிரித்துக் கொடுக்க மனமில்லாமல் பிரதிவாதி காலம் தாழ்த்தி வருகின்றார். ஆனால், சொத்தின் ஒரு பகுதியை தனது தற்போதைய மனைவியின் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார்.

குழந்தைகளுக்கு சேர வேண்டிய பங்கினை உரிய காலத்திலேயே பிரித்துக் கொடுத்திருந்தால் கூட, அது வாதியின் ஜீவனத்திற்கு பயனுள்ளதாக இருந்திருக்கும். மாறாக அவர்களுக்கு எதிராக அ.வ.எண்.186/2014 வழக்கினை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்.

26) பிரதிவாதி தனக்கு பல உடல் நலக்குறைபாடுகள் உள்ளதாகவும், அதற்காக பல வருடங்களாக சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்து மருத்துவ ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.9 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில், பிரதிவாதி தொடர்ச்சியாக பல நாள்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்ததாக எந்த குறிப்பும் இல்லை. மாறாக காலையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனை அல்லது சிகிச்சை முடிவடைந்து அன்றைய தினமே மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்யப்பட்டதாக தான் உள்ளது. மேற்படி ஆவணங்களிலிருந்து 65 வயது ஆன பிரதிவாதி தனது வயதிற்கு உரிய உபாதைகளுக்கு தான் சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளார் என்றே எடுத்துக்கொள்ளவேண்டியுள்ளது.

27) பிரதிவாதி கடந்த 2022ம் ஆண்டில் ரூ.9,50,000/- அடமானகடன் பெற்றுள்ளார் என்பதிலிருந்தே அவருக்கு வருமானம் இருப்பதால் தான் கடன் வழங்கப்பட்டுள்ளது என்று எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி, கடன் தொகையும், அவரது வருமானமாகவே தான் எடுத்துக்கொள்ள முடியும். வாதி தரப்பு வழக்கறிஞர் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு மத்தியபிரதேச உயர்நீதிமன்றம் Monika Vs Praveen in 2024 (3) Crimes 423 என்ற வழக்கில் தீர்மானித்துள்ளவாறு கடன் என்பது முன்பணமாக மொத்தமாக வாங்கப்படும் தொகையை பிரித்து பல்வேறு தவணைகளில் செலுத்தப்படும் தன்னிச்சையான

பிடித்தமாகும். எனவே, ஜீவனாம்ச தொகை கணக்கிடும் போது அதனை கணக்கில் கொள்ளக்கூடாது என்று தெரிவித்துள்ளது. மேற்கண்ட விவாதத்தின் அடிப்படையில் வாதி தற்போதைய நிலையில் தன்னை பராமரிக்கக்கூடிய நிலையில் அவர் இல்லையென்றும், பிரதிவாதி வாதியை பராமரிக்க வேண்டியது அவருடைய கடமை என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. இந்த வழக்கானது கடந்த 2015 ம் ஆண்டில் மாதம் ரூ.8,000/– ஜீவனாம்சமாக வாதிக்கு, பிரதிவாதி வழங்க உத்தரவிட வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்து 10 வருடங்கள் ஆன பின்னர் தற்போது உள்ள நிலவரத்தின் படியும், வாதியின் வயதின் காரணமாக மேற்படி ரூ.8,000/– என்பது மிகவும் குறைவான தொகையே ஆகும். பிரதிவாதி தனது முழு வருமானம் பற்றிய தகவல்களை இந்நீதிமன்றத்தில் தெரிவிக்காததன் காரணமாக அவரது வருமானத்தை பொறுத்து அவருக்கு எதிராக எதிரிடை அனுமானம் எடுத்துக்கொண்டு வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சாட்சிய மற்றும் சான்றாவணத்தின் அடிப்படையில் வாதி கோரிய ஜீவனாம்ச பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி எழுவினா எண்–1 மற்றும் கூடுதல் எழுவினா எண்–1 ற்கு தீர்வு காண்கின்றது.

**<u>28) எழுவினா எண்கள்–2 மற்றும் 3 க்கான தீர்வு:–</u>**

| | |
|---|---|
| **எழுவினா – 2** | Whether the plaintiff is entitled to get the relief of charge over the suit properties ? |
| **எழுவினா – 3** | Whether the relief of sale of charged properties in default of payment of maintenance can be granted to plaintiff ? |

தாவா சொத்தின் பெயரில் பொருட்பிணை (charge) விதித்து பரிகாரம் வழங்க வேண்டுமென்று கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்றும், பிரதிவாதி ஜீவனாம்ச தொகையை செலுத்த தவறும் பட்சத்தில்

பொருட்பிணை விதிக்கப்பட்ட சொத்தினை விற்பனை செய்து வாதிக்கு ஜீவனாம்சம் வழங்க வேண்டுமென்று கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பது குறித்து கவனமாக பரிசீலனை செய்ததில், இந்நீதிமன்றம் மேற்படி எழுவினா எண்–1 மற்றும் கூடுதல் எழுவினா எண்–1 ஆகியவற்றிற்கு தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு வாதி மாதம் ரூ.8,000/– ஜீவனாம்சம் தொகை கொடுக்க உத்தரவிடவேண்டுமென்று கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்து நிலுவையிலிருந்து வந்த சமயத்தில் பிரதிவாதி தனது 2 வது மனைவி மஞ்சுளா தேவி பெயருக்கு தாவா 2 வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். மேலும், மேற்படி சொத்தில் ஒரு வீடும் கட்டப்பட்டுள்ளது என்று பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

29) இந்த வழக்கு நிலுவையிலிருந்து வரும் விவரமும், மேற்படி தாவா சொத்துக்களின் பெயரில் பொருட்பிணை விதிக்க வேண்டுமென்று பரிகாரம் கோரப்பட்ட பின்னரும் பிரதிவாதி சொத்தினை தனது 2 வது மனைவி மஞ்சுளா தேவி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்பது தெரிகிறது. மேற்கொண்டு இந்நீதிமன்றம் வாதிக்கு ஜீவனாம்சம் வழங்க வேண்டுமென்று பரிகாரம் வழங்கியுள்ளதை பிரதிவாதி செயல்படுத்தாத நிலையில், மேலும், மேலும் தாவா சொத்துக்களின் பெயரில் சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்துவது வாதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, பிரதிவாதி, வாதிக்கு வாழ்நாள் முழுவதும் ஜீவனாம்சம் வழங்குவதை உறுதிப்படுத்தும் வண்ணம் தாவா சொத்துக்களின் பெயரில் பொருட்பிணை விதிப்பது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதனடிப்படையில் வாதி கோரியபடி தாவா சொத்தில் பிரதிவாதிக்குள்ள 1/3 பங்கு தொகையை பொறுத்து தாவா சொத்தின் பெயரில்

பொருட்பிணை (charge) விதித்தும், பிரதிவாதி மேற்படி ஜீவனாம்ச தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் பொருட்பிணை விதிக்கப்பட்ட தாவா சொத்துக்களை விற்பனை செய்து வாதிக்கு ஜீவனாம்சம் வழங்க வேண்டுமென்று கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அதன்படியே எழுவினா எண்கள்–2 மற்றும் 3 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**30) <u>எழுவினா எண்–4 க்கான தீர்வு:–</u>**

| | |
|---|---|
| **எழுவினா – 4** | To what other relief is entitled to ? |

மேற்கண்ட எழுவினா எண்கள்–1 முதல் 3 க்கு தீர்வு கண்டுள்ளபடி வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து தீர்வு கண்டுள்ளதால், வழக்கின் சங்கதிகளின் படி வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் எதுவும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு வழக்கின் செலவு தொகைகளை பிரதிவாதியே ஏற்கவேண்டும் என்று முடிவு செய்து அதன்படியே எழுவினா எண்–4 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**முடிவாக,**

i) வாதியின் உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ செலவிற்காக வழக்கு தாக்கல் செய்த 08.01.2015 தேதி முதல் மாதம் ரூ.8,000/– வீதம் கணக்கிட்டு ஜீவனாம்ச தொகையாக ஆயுள் முழுவதும் பிரதிவாதி வழங்க வேண்டுமென்ற பரிகாரமும்,

ii) தாவா சொத்தில் பிரதிவாதிக்குள்ள 1/3 பங்கு தொகையை பொறுத்து தாவா சொத்தின் பெயரில் பொருட்பிணை (charge) விதிக்க வேண்டுமென்ற பரிகாரமும்,

iii) பிரதிவாதி மேற்படி ஜீவனாம்ச தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் பொருட்பிணை விதிக்கப்பட்ட தாவா சொத்துக்களை விற்பனைக்கு கொண்டு வந்து வாதிக்கு ஜீவனாம்சம் வழங்கவேண்டும் என்றும் கோரிய பரிகாரமும் வாதிக்கு வழங்கி வழக்கினை செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 05.03.2026 அன்று அவையறிய பகரப்பட்டது.

V KALIDASAN Digitally signed by V KALIDASAN Date: 2026.03.05 18:55:03 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

**பிற்சேர்க்கை:—**

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி:—**

வா.சா.1 – ஜானகி

**பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி:—**

பி.வா.சா.1 – வரதராஜன்

பி.வா.சா.2 – செந்தில்குமார்

**நீதிமன்ற சாட்சி:—**

நீ.ம.சா.1 – சிவக்குமார்

**வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:—**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | அ.வ.எண்.186/2014 ல் வாதிக்கு சார்பான பிராதின் நகல். |
| வா.சா.ஆ.2 | 04.05.1989 | தேதியிட்ட பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவில்லா பத்திரத்தின் அசல். |
| வா.சா.ஆ.3 | 16.11.2005 | தேதியிட்ட அடைமானப் பத்திரத்தின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.4 | 31.01.2018 | தேதியிட்ட அடைமானம் மீட்பு ஆவணத்தின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.5 | 10.04.2018 | தேதியிட்ட பிரதிவாதி அவரது 2 வது மனைவிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம். |
| வா.சா.ஆ.6 | – | ஸ்ரீராம் சிட்டியூனியன் பைனான்ஸ் நிறுவனம் வழங்கிய ரசீதின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.7 | 15.03.2022 | ஹரி நந்தினி பைனான்சில் அடமானம் வைத்துள்ள அடமானப்பத்திரத்தின் சான்றிட்ட நகல். |

<u>பிரதிவாதி தரப்பில் குறியிடப்பட்டுள்ள சான்றாவணங்கள்:–</u> இல்லை

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 05.03.2007 | வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் |
| பி.வா.சா.ஆ.2 | 04.05.1989 | வாதி மற்றும் அவரது மகன் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம். ஆவண எண்.1378/1989 |
| பி.வா.சா.ஆ.3 | 04.05.1989 | வாதி மற்றும் அவரது மகன் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம். ஆவண எண்.1377/1989 |
| பி.வா.சா.ஆ.4 | – | 17.10.2019 dated X–ray for Cervical Spine Problem |
| பி.வா.சா.ஆ.5 | – | 02.03.2020 dated X–ray for Hip Joint problem |
| பி.வா.சா.ஆ.6 | – | Photos for plaintiff's Godown at Samalapuram and Tiruppur with CD and receipt |
| பி.வா.சா.ஆ.7 | – | Guideline value of the plaintiff's property at 15 Velampalayam village, Tiruppur district |
| பி.வா.சா.ஆ.8 | – | Online Chitta for plaintiff's property at Tiruppur |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.9 | – | 01.12.2023 dated Defendant's eye Operation Discharge summary |
| பி.வா.சா.ஆ.10 | – | 30.12.2021 Defendant's Angiogram report |
| பி.வா.சா.ஆ.11 | – | Defendant's hip joint operation report, discharge summary and medical bills certified copies. |

**நீதிமன்ற சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| நி.ம.சா.ஆ.1 | – | திருப்பூர் மாநகர ஆட்சியாளரின் அதிகாரம் அளிப்பு கடிதம் |

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.05 18:54:56 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

அ.வ.எண்.9/2015

**சீரான**/வரைவு **தீர்ப்புரை**

நாள் : 05.03.2026

**மா.உ.நீ., பல்லடம்**